**OS.No. 170/2022**

**Date: 30.07.2025.**

**PW : 1 முரளிதரா த/பெ.சந்திரய்யா**

**2 முதல் 6 , 8, 10, 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கௌஷ் பாஷா எனக்கு எத்தனை வருஷமாக பழக்கம் என்று சொன்னால் 2019 –ல் இருந்து தெரியும் . நான் விவசாய வேலை செய்கிறேன். கௌஷ்பாஷா ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சரி. வழக்கு போட்டிருக்கும் இச்சொத்தை நான் தான் விற்க இருப்பதாக கௌஷ்பாஷாக்கு தகவல் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு 2 ஏக்கர் நிலத்துக்காக போடப்பட்டுள்ளது. 2 ஏக்கர் நிலத்திற்கு 1 கோடியே 15 லட்சம் என்று பேசினோம். இந்த தாவா சொத்தை விற்பதற்கு முன்பாக வேறு எதாவது சொத்தை விற்றுள்ளேனா என்று சொன்னால் விற்றுள்ளேன். ஒரு நபர் பழக்கமில்லாத பட்சத்தில் அந்த நபர் பெயருக்கு தொகை கொடுக்காத பட்சத்தில் கிரய பத்திரம் எழுதிக்கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் காசோலை கொடுத்தார் அதனால் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் . பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த அன்றே கௌஷ்பாஷா பெயரில் வேறு எந்த ஆவணமும் எழுதிக்கொடுத்தேனா என்று சொன்னால் அவ்வாறு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் EX.C1 ஆனது எங்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி EX.C1 ஆவணத்தில் 1 கோடியே 15 லட்சம், ஆவண எண், காசோலை எண் , வங்கியின் பெயர் ஆகியவை பேனாவால் எழுத்தப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரிதான். மேற்படி Ex.c1 ஆவணத்தில்

உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்று சொன்னால் சரிதான் . மேற்படி Ex.C.1 ஆவணத்தை ஏற்கனவே பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்த பிறகு தயார் செய்து அதில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரி. எனக்கு ஆங்கிலம் நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி ரசீதில் அதாவது EX.C.1ல் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரிதான் . மேற்படி Ex.C.1 ஆவணத்தில் உள்ள விவரங்கள் சரியானவை என்று தெரிந்த பிறகு தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான் . மேற்படி Ex.C.1 ஆவணத்தில் தொகை 1கோடியே 15 லட்சம் நான் பெற்றுக்கொண்டதால் தான் அதில் எழுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் செக் கொடுத்தார்கள் ஆனால் செக் பாஸ் ஆகவில்லை. GPA எழுதுவதற்கு முன்பாக நான் காசோலை கொடுக்கிறேன். நீங்கள் GPA எழுதித்தாருங்கள் என்று கௌஷ்பாஷா கேட்டார் அதனால் GPA எழுதிக்கொடுத்தேன். GPA–ல் கௌஷ்பாஷா செக் கொடுத்ததாக ஏதும் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் கௌஷ்பாஷா எழுதிக்கொடுத்திருக்கும் செக் பாஸ் ஆகும் வரையில் அவர் கிரயம் செய்யக்கூடாது என்ற நிபந்தனை GPA–ல் இல்லை என்று சொன்னால் சரிதான் . ஆகையால் GPA–ல் கொடுக்கப்பட்டுள்ள ஷரத்துகள் படி கௌஷ்பாஷா விற்பதற்கு அதிகாரம் உள்ளது என்று சொன்னால் சரிதான் . ஆனால் அவர் பணம் கொடுக்கவில்லை அதனால் நான் அந்த Transaction செல்லாது என்று கூறினேன். நான் மேற்படி செக்கை கலெக்ஷன் போடுவதற்கு முன்பாகவே 26.12.2020–ம் தேதி 2 கிரய பத்திரங்களை கௌஷ்பாஷா எழுதிக்கொடுத்துள்ளார் என்ற சொன்னால் அந்த விவரம் எனக்குத்தெரியாது.

10.01.2021–ல் மேற்படி செக் பவுன்ஸ் ஆகிவிட்டது என் சொன்னால் சரிதான். அவ்வாறு 10.02.2021–ம் தேதி செக் பவுண்ஸ் ஆனபிறகு நோட்டீஸ் எதுவும் கௌஷ்பாஷாக்கு கொடுக்கவில்லை ஆனால் செக் திருப்பப்பட்ட விவரத்தை கௌஷ்பாஷாவிடம் சொன்னேன் . அவ்வாறு செக் பவுன்ஸ் ஆன பிறகு நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் முதல் பிரிதிவாதி கிரய ஆவணம் ஏதும் எழுதிக்கொடுக்கக்கூடாது என்று சொல்லி ஆட்சேபனை ஏதும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . அது பெரிய தொகை என்பதால் 2 ,3 மாதம் கழித்து தருகிறேன் என்று சொன்னால் அதற்காக நான் பணம் அவரிடம் வாங்குவதற்காக காத்துக்கொண்டிருந்தேன். மேற்படி அந்த செக் பவுன்ஸ் ஆனதிலிருந்து 25.06.2021 வரை கௌஷ்பாஷா பல்வேறு கிரய பத்திரங்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான் . அந்த செக் பவுன்ஸ் ஆனபிறகு முதல் முறையாக 09.07.2021–ல் தான் நான் கௌஷ்பாஷாவிற்கு நோட்டீஸ் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான் . அவ்வாறு நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் போட்டுப் பார்க்கப்பட்டதா என்று சொன்னால் வில்லங்க சான்று போட்டுப்பார்த்து சொத்துக்கள் விற்கபட்ட விவரம் தெரிந்து அதன்பிறகு நோட்டீஸ் அனுப்பினேன். சொத்து விற்கப்பட்டு எனக்கு பணம் தராததால் நோட்டீஸ் அனுப்பினேன். மேற்படி நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பாக அந்த GPA வை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் ரத்து செய்வதற்கு சார்பதிவாளர் என்னை அனுமதிக்கவில்லை. அவ்வாறு சார்பதிவாளர் ரத்து செய்வதற்கு அனுமதிக்காததால் நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான் . மேற்படி நோட்டீஸ்

அனுப்புவதற்கு முன்பாக கௌஷ்பாஷா சொத்து முழுவதையும் விற்பனை செய்துவிட்டதால் ரத்து செய்ய முடியாது என்று சார்பதிவாளர் பதில் சொன்னார் என்று சொன்னால் கௌஷ்பாஷா வந்தால் தான் ரத்து செய்ய முடியும் என்று சார்பதிவாளர் சொன்னார் . நோட்டீஸ் கொடுப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போயிருந்தேன் . நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பாகவே ஏற்கனவே சொத்து விற்கப்பட்ட விவரம் தெரிந்தும் அதை வாங்கியவர்களுக்கு நான் நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் பேப்பரில் Notification கொடுத்தேன். நோட்டீஸ் அனுப்பி 2 மாதம் கழித்து நான் பேப்பரில் Notification கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN